**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்புநிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன்சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பானஅறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின்

அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக நீர், மின்சாரம் மற்றும் அலுவலக இடவசதிகளை பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதற்குரிய கட்டணங்களான நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் அலுவலக வாடகை கணிக்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டிற்குரிய செலவினங்கள் உரிய முறையில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. 2022 பாதீட்டினுள் நீர் மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 1 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவு மேற்கொள்வதற்கு உரிய முறைமையொன்று இனங்காணப்பட்டு இல்லாமையினால் எதிர்காலத்தில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி சரியான முறைமையொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய அனைத்து செலவீனங்களும் முறையே இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ii) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூவர் நிதியத்தில் நிரந்தரமாக கடமையில் பணிக்கப்படிருந்ததுடன், அம் மூன்று உத்தியோகத்தர்களுக்கு உரியதாக | நிதியம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் இடையே தொடர்பினை | ஆண்டிற்குரிய அனைத்து செலவீனங்களும் முறையே |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் செலுத்தப்பட்டுள்ள சம்பளம் மற்றும் ஊதியம் ரூபா 2.122 மில்லியன் ஆன செலவீனம் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செலவீனமொன்றாக கணக்கிடப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டிற்குரியதாக நிதியத்தின் மிகை அப் பெறுமானத்தில் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பேணிச் செல்வதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு இணைக்கப்படுவர். அவர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகத்தர்கள் என்பதனால் திணைக்களத்தின் ஊடாக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (iii) | நிதியத்திற்கு சொந்தமாகவிருந்த PC-4948ஆம் இலக்க கெப் வாகனம் 2020 திசெம்பர் 13 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ரூபா 5.080 மில்லியன் ஆன கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PC-4948ஆம் இலக்க வாகனத்திற்குரிய கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் கணக்கு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமைகளுக்கு அமைவாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (iv) | பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற போதிலும் தேறிய பெறுமதி பூஜ்ஜியமாகவுள்ள கிரயம் ரூபா 21.290 மில்லியன் ஆன 03 வாகனங்கள் மீள மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கிரயம் ரூபா 21.290 மில்லியன் ஆன வாகனங்கள் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மீள்மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமைகளுக்கு அமைவாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (v) | நிதியத்திற்கு பெறப்படுகின்ற வருமானம் வருடாந்தம் சேமிப்பு கணக்கொன்றிற்கு மாற்றப்படுவதுடன், அச் சேமிப்பு கணக்கில் சேகரிக்கப்படுகின்ற பணம் காலத்திற்கேற்ப பொருத்தமான குறுகிய கால முதலீடுகளில் முதலிடப்படாது ரூபா 300 மில்லியன் வரையில் சேமிப்பு கணக்கில் நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணிப்புக்களின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 18 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் சேமிப்பு கணக்கினுள் ஆண்டு இறுதியில் ரூபா 121 மில்லியன் மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மிகை நிதியினை உரிய முறையில் முதலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை நிதியினை ஆக்கப்பூர்வமாக முதலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (vi) நிதியத்தினால் 2018 திசெம்பர் 17 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள மொத்த கிரயம் ரூபா 129.999 மில்லியன் ஆன வளி தரத்தினை அளக்கும் உபகரணங்கள் மூன்றிற்கான ரூபா 25.999 மில்லியனான தேய்வு கணிக்கப்பட்டு நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படாமையின் காரணத்தினால் ஆண்டின் மிகை அப் பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சட்டரீதியாக கையளிக்கப்பட்ட நாள் தொடக்கம் தொடர்புடைய தேய்வு பெறுமானம் கணக்கு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமைகளுக்கு அமைவாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (vii) வழங்குனரொருவரிடமிருந்து சுற்றுபுற வளியின் தரத்தினை அளக்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது (Ambient Air Quality meters)ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் குறித்த உபகரணங்களின் பயன்பாடு தொடர்பில் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சியொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு அவ் வழங்குனர் நடவடிக்கை எடுக்காமையினால் கொடுப்பனவு செய்யாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 2 மில்லியன் கொடுப்பனவு அந் நிறுவனத்தின் உடன்பாட்டினை பெற்றுக் கொண்டு கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டிய மீதியாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | குறித்த வழங்குனர் நிறுவனத்தில் விசாரித்து ரூபா 2 மில்லியன் தொகையினை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த செலுத்தப்பட வேண்டிய மீதி புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டு வருமானத்திற்கு சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 17/1615/702/002-xvii ஆம் அமைச்சரவை பத்திரிக்கை மற்றும் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள 02/2018ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் புகை பரீட்சிப்பு நிதியத்தினை கலைத்து பொறுப்புக்களை தீர்த்து முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரவை அங்கீகாரம், நிதி அமைச்சின் அங்கீகாரம் அல்லது திறைச்சேரியின் அங்கீகாரமின்றி வரிசை அமைச்சர் ஊடாக நிதியத்தின் பாதீட்டினை | நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பில் தீர்மானமொன்றினை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் அமைச்சரவை அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக விரைவில் அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| அங்கீகரித்துக் கொண்டு நிதியத்தினை நடாத்திச் செல்வதற்கு நிதியத்தின் பொறுப்புச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | | | |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புகை பரீட்சிக்கும் தனியார் நிறுவனங்கள் இரண்டுடன் ஏற்படுத்திற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாகனங்களுக்காகவும் அறவிடப்படும் பரீட்சிப்பு கட்டணத்தில் 10 சதவீதம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். எனினும் மேற்படி தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பரீட்சிப்பு எண்ணிக்கைகள், அவர்களினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் அதன் பிரகாரம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானம் தொடர்பாக பரீட்சித்து அரசு பெற வேண்டிய வருமானம் உரிய வண்ணம் பெறப்பட்டதா என உறுதி செய்யப்படாது நடப்பு ஆண்டினுள் இரு நிறுவனங்களினாலும் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டிருந்தரூபா 272.23 மில்லியன் பெறுமானம் நிறுவனத்தின் வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. | புகை பரீட்சிப்பு பெறுபேறுகள் முன்வைக்கப்படுவது ICTA நிறுவனத்திற்காவதுடன்ஆவதுடன் அதனூடாக புகை பரீட்சித்தல் நிறுவனத்திற்குரிய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படும். எனவே அச் செயன்முறையினுள் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களின் அடிப்படையில் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற 10% ஆன தொகை கணிக்கப்படும். | புகை பரீட்சிக்கும் தனியார் நிறுவனங்கள் இரண்டின் பரீட்சிப்பு கட்டண வருமானத்தினை பரீட்சிப்பதற்குரிய முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள˙, விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச்சுற்றறிக்கை | | | |
| நி.பி 876 2(அ) | தற்போதுள்ள நிதியத்தின் செயற்பாடு தேசிய தேவைப்பாடென தோன்றினால் மற்றும் அந் நிதியம் முறையான சட்டமொன்றின் ஊடாக | நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்காக | சுற்றறிக்கை மற்றும் நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிராதெனில் அந் நிதியம், இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டு ஆண்டொன்றினுள் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுவின் பரிந்துரை அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிமி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 252,377,705 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் மிகை ரூபா 248,572,349 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 3,805,356 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்படுகின்றதுடன் கடந்த ஆண்டிற்கு இணையாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 34,393,151 இனால் அதிகரித்திருந்தமை இந்த வளர்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு சபையினை கலைத்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக புகை பரீட்சித்தல் செயற்திட்ட அலுவலகம் தாபிப்பதற்கு 2017 திசெம்பர் 10 ஆந் திகதிய DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கையில் மற்றும் PFD/RED/CIR/2018/02 ஆம் இலக்க 2018 ஆகஸ்ட் 18 திகதிய திறைச்சேரி செயலாளரின் கடிதத்தின் ஊடாக நிதியத்தினை கலைப்பதற்கு பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக தாபிக்கப்படாது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை கருத்திற் கொள்ளாது அதற்கு முரணாக 18 பதவிகளை பேணிச் சென்று ரூபா 7,360,976 ஆன | வாகன புகை பரீட்சித்தல் செயற்திட்ட அலுவலகத்தின் பணிகள் மற்றைய பொதுவான பணிகளை பார்க்கிலும் மேலதிக தகைமைகளை உடைய பதவியணியின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. அதற்காக பதவியணியினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காகவும் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் பதவியணிக்காக பதவிப் பெயர்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2017.12.10 திகதிய மற்றும் MT/02/01/01/02/11/II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் செயற்திட்ட அலுவலகத்திற்கான பதவிகள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட சேவைகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையினால் தற்போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அச் சேவைகளுக்கு உள்ளீர்க்கப்படுதல் தொடர்பில் பிரச்சனையொன்று எழுந்துள்ளது. இது தொடர்பில் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின கடிதத்தின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தி நிதியத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு ஆளுகை சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், இராஜாங்க அமைச்சுடன் கலந்துராயாடல்கள் நடத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் போக்குவரத்து அமைச்சருக்கு அமைச்சரவை பத்தரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ii)வளியின் தரத்தினை அளக்கும் உகரணங்கள் தொடர்பாக 2020 சனவரி 16 ஆந் திகதி மற்றும் 2020 நவம்பர் 03 ஆந் திகதி நிதியத்தின் பொறுப்பு சபையினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் மொத்த கிரயம் ரூபா 82.752 மில்லியனான Eco Tech மாதிரியில் தாபிக்கப்பட்டுள்ள சுற்றுபுற காற்றின் தரத்தினை அளக்கும் 02 அலகுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் கிரயம் ரூபா 47.247 மில்லியன் ஆன நடமாடும் சுற்றுபுற காற்றின் தரத்தினை அளக்கும் உபகரண தொகுப்பொன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள உபகரணங்களின் இயக்க பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ரூபா 17.58 மில்லியன் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபா 8 மில்லியன் என ரூபா 25.58 மில்லியன் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு தொடர்பற்ற கிரயமொன்றினை ஏற்பதற்கு 2022 மார்ச் 15 திகதிய புகை பரீட்சித்தல் நம்பிக்கை பெறுப்பு சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த நிதியத்தினை ஏற்படுத்திய அடிப்படை நோக்கங்களில் வளியின் தரத்தினை மேம்படுத்தவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் பிரதானமானதாகும். அவ்வாறான நடவடிக்கைகளுக்காக அரசிற்கு மேலதிக கிரயமொன்று ஏற்பதற்கு இடமளிக்காது இந்த நிதியத்தின் ஊடாக நிதியேற்பாட்டினை பயன்படுத்தப்படும். அதன் பிரகாரம் வளியின் தரம் தொடர்பான சரியான கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு புகையின் தரம் தொடர்பான தகவல்கள் தேவைப்படுகின்றது. | வளியின் தரத்தினை அளத்தல் மற்றும் வளி மாசினை குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய பணிகள் நிதியத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆனையாளர் நாயகம் இடையே ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் ரூபா 30.82 மில்லியன் செலவில் 2013 ஆம் ஆண்டில் நடமாடும் சுற்றுபுர காற்றின் தர மேற்பார்வை மத்திய நிலையமொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அவ் உபகரண தொகுப்பு செயலற்று போதல் மற்றும் பழுபார்த்தலுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணத்தினால் குறித்த உபகரண தொகுப்பு மற்றும் அவ் உபகரண தொகுப்பு தாபிக்கப்பட்டுள்ள லொறி எந்தவொரு பயன்பாடும் இன்றி பழைமையாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த உபகரணங்கள் தொகுப்பின் சட்டரீதியான உரித்து மற்றும் பராமரிப்பு பொறுப்பு நிதியத்திடம் காணப்படுகின்றமையினால் அவ் உபகரணங்களை பழுதுபார்ப்பதா அல்லது கைதவிர்ப்பு செய்வதா என சரியான நேரத்தில் தீர்மானிக்கப்பட்டு குறித்த வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இந்த உபகரணங்களை பழுதுபார்ப்பதற்கு தொடர்புடைய தேசிய முகவர்கள் இல்லையென எங்களுக்கு தெரிவித்துள்ளனர். அதன் பிரகாரம் எங்களால் குறித்த உபகரணங்களை கையேற்பதற்குள்ள திறன் தொடர்பில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் அந்த வாகனத்தினை பொறுப்பேற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். | சொத்துக்களை பாதுகாப்பதற்கு மற்றும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) புகை பரீட்சித்தல் நிதியத்தின் கணக்குகளின் பிரகாரம் 2022.12.31 ஆந் திகதி வரையான ஒட்டுமொத்த இலாபம் ரூபா 476.901 மில்லியன் ஆன போதிலும் அதன் ஒட்டுமொத்த இலாபம் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்படாது ரூபா 328.263 மில்லியன் நிலையான வைப்புக்களில் மற்றும் ரூபா 121.677 சேமிப்பு வைப்புக்களில் முதலிடப்பட்டிருந்தது. | நிதியத்தின் மேலதிக நிதி அரச நிதி திணைக்களத்தின் கோரிக்கையின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டும் நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 400 மில்லியன் தொகை திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் மேலதிக நிதி சரியான நேரத்தில் திரண்ட நிதிக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிதியத்தினை ஆரம்பித்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியத்தினை தாபித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வளியின் தரத்தினை அளக்கும் உபகரணங்கள் மற்றும் புகை பரிசோதனை உபகரணஙங்கள் வேறு வெளி நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ரூபா 283.5 மில்லியன் மற்றும் பரீட்சித்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 40 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அம் முதலீடுகளின் ஊடாக நிதியத்தின் நோக்கங்கள் அடைந்துள்ளமை தொடர்பில் உறுதி செய்வதற்கு செயலாற்றல் அறிக்கை அல்லது செயன்முன்னேற்ற அறிக்கைகள் ஏதும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயலாற்றல் தரவு/ அறிக்கைகள் என கடந்த 15 ஆண்டுகளினுள் நிதியத்தின் நோக்கங்கள் நிறைறேற்றப்பட்டமை தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு பெறுப்பு சபை தவறியிருந்தது. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வாறே தற்போது நிதியின் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றது. | செயலாற்றல் அறிக்கை அல்லது செயன்முன்னேற்ற அறிக்கை சரியான நேரத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) வாகனங்கள் தொடர்பான வளி மாசடைவு, இலங்கையில் பிரதான நகரங்களில் வளியின் தரம், வலுசக்தி சுற்றாடல் மற்றும் பொருளாதார தாக்கல்கள் போன்ற வெவ்வேறு பரிசோதனைகளுக்காக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை புகை பரிசோதனை நிதியத்தின் ஊடாக ரூபா 28.6 மில்லியன் செவீனமொன்று ஏற்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தினால் இறுதி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு எந்தவொரு நன் செயற்பாட்டிற்காகவும் வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்பட்டிராமையின் காரணத்தினால் அச் செலவீனம் விளைவற்றதாக காணப்பட்டது. | தற்போது அனைத்து பரிசோதனை அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள என தெரிவித்துக் கொள்வதுடன் பரிசோதனை அறிக்கைகள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்தரைகளை செயற்படுத்தல் மற்றும் குறித்த தரவுகளை அது தொடர்பில் ஆர்முள்ள தரப்பினருக்கும் சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவ அலகிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்வதுடன் எங்கள் வலைத்தளத்திலும் சுற்றாடல் அமைச்சின் வலைத்தளத்திலும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிசோதனை அறிக்கைகள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிதியத்தினால் ரூபா 47.247 மில்லியன் கிரயமொன்று ஏற்கப்பட்டு நடமாடும் வளி தர மேற்பார்வை அலகொன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் அவ் நடமாடும் வாகனம் வேறு எந்தவொரு பிரதேசத்திலும் வளி தரத்தினை பரீட்சிக்காது 2020 மார்ச் மாதம் தொடக்கம் கொழும்பு மாநகர சபை சூழலில் தரித்து அச் சூழலில் மட்டும் வளி தரத்தினை பரிசோதனையை மேற்கொண்டிருந்தது. | நகர பிரதேசங்களுக்குச் சென்று வளி தரத்தினை அளப்பதற்காக அதிக செலவீனமொன்று ஏற்பதற்கு நேருகின்றமையின் அடிப்படையில் உபகரணங்களை பயன்படுத்தாது வைப்பதனால் அதற்கு நேருகின்ற சேதத்தினை தவிர்த்துக் கொள்வதற்கும், அவ் உபகரணங்களை பிரயோஜனமுள்ள ரீதியில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும், கொழும்பு மாநகர சபையின் உடன்பாட்டுடன் கொழும்பு மாநகர சபையின் சூழலில் முழு பாதுகாப்புடனும் தாபிக்கப்பட்டு தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. | வளி தரம் பரீட்சிப்பு இடங்கள், முறைமைகள், காலம் மற்றும் ஈடுப்படுத்தப்படும் சொத்துக்கள் உள்ளடங்கலாக முறையான பரிசோதனை திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். |
| (ii) புதிய புகை பரிசோதனை மத்திய நிலையங்கள் தாபிப்பதற்காக தேவைப்படுகின்ற அடிப்படை அங்கீகாரத்தில் மற்றும் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படாது புகை பரிசோதனை நிதியத்தினால் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 21.937 மில்லியன் கிரயமொன்றினை ஏற்று 10 புகை பரிசோதனை தொகுப்புக்களை இலங்கை போக்குவரத்து சபைக்கு பெற்றுக் கொடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டு வரை மேற்படி புகை பரிசோதனை மத்திய நிலையம் தாபிப்பதற்கான தேவைப்படுகின்ற சட்ட ரீதியான தீர்வுகள் பெற்றுக் கொள்ள இயலாமையின் காரணத்தினால் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் அவ் உபகரணங்கள் பயன்படுத்தப்படாது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட முடியாத நிலையை அடைந்து வந்தது. | மோட்டார் வாகன போக்குவரத்து ஆனையாளர் நாயகத்தினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிக்காக வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் அது தொடர்பில் தற்போது அனைத்து மாவட்ட செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்வதுடன் மிகவும் விரைவில் அந் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படவுள்ளதென தெரிவிக்கின்றேன். | அடிப்படை அங்கீகாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்துள்ளமை உறுதி செய்யப்பட்ட பின்னர் இவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) புகை பரிசோதனை நம்பிக்கை நிதியம் ரூபா 82.75 ஆன செலவீனமொன்றினை ஏற்று சுற்றுப்புற வளி தரத்தினை அளக்கும் அலகுகள் | இந்த உபரணத்தினை கொள்வனவு செய்தலின் பிரதான நோக்கம் வளி தரத்தினை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றினை மக்களுக்கு | வளி தரத்தினை அளக்கும் உபகரணம் ஊடாக பெற்றுக் கொள்ளும் |

இரண்டினையும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் ரூபா 47.24 மில்லியன் கிரயத்தினை உடைய நடமாடும் சுற்றுப்புற வளி தரத்தினை அளக்கும் உபகரணத்தினை கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுத்திருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளும் அளவீட்டு தரவுகள் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்படி வளி தர அளவீட்டு உபகரணத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டு தரத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணி தொடர்பாக முன் குறிப்பு வேலைத்திட்டம் இல்லாமை மற்றும் அவ் அளவீட்டு தரவுகள் பயன்படுத்தி எந்தவொரு பிரயோஜனமுள்ள பணியொன்றும் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால்ரூபா 130 மில்லியனிற்கு அதிகமாக அரச நிதி முதலீடு மற்றும் உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அளவீட்டு தரவுகள் விளைவற்றதாக காணப்பட்டது.

காட்சிப்படுத்துலுமாகும். இந்த தரவுகள் சுற்றாடல் அமைச்சின் வளி தர முகாமைத்துவ மையத்தின் ஊடாக வளி தரத்தினை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான கொள்கை, தீர்மானம் மற்றும் செயற்பாடுகளை இனங்காண்பதற்கும் ஈடுப்படுத்தப்பட்டுள்ளமையை தெரிக்கின்றேன்.

அளவீட்டு தரவுகள் பயன்படுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணி தொடர்பில் குறித்த வேலைத்திட்ட-மொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.